# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

www.dhinathdhalam.com

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., DHINATH DHALAM Tamil & English daily Paper நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 094 | வெள்ளிக்கிழமை Friday | 03.07.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode


# தமிழக பட்ஜெட்: துறை வாரியாக முதலமைச்சர் விஜய் ஆலோசனை




விவசாயிகளின் பிரதான உபதொழிலான கால்நடை வளர்ப்பு, தற்போது நடப்பாண்டில் பருவமழை பொய்த்ததாலும், வெயிலின் தாக்கம் அதிகரித்ததாலும் கடும்பாதிப்பைச்சந்தித்துள்ளது. புற்கள் கருகிவிட்ட நிலையில், மாடுகளின் முதன்மைத் தீவனங்க ளான தவிடு, பருத்திக் கொட்டை, புண்ணாக்கு மற்றும் மக்காச்சோளம் போன்றவற்றின் விலை மூட்டைக்கு ரூ.200 முதல் ரூ.500 வரை உயர்ந்துள்ளது.

பராமரிப்பு மற்றும் தீவனச் செலவு அதிகரித்துள்ள நிலையில், மாடுகளுக்கான போதிய உணவு கிடைக்காததால் பால் உற்பத்தி பாதியாகக் குறைந்துள்ளது.

நெல்லை விவசாயிகள் இதுகுறித்துப் பேசும்போது, "முன்பு 8 லிட்டர் கறந்த மாடுகள், தற்போது 3 முதல் 4 லிட்டர் பால் மட்டுமே கறக்கின்றன. மேலும் மாடுகள் உண்ணித் தொல்லை மற்றும் இரத்த சோகையாலும் பாதிக்கப்படுகின்றன"என்றுவேதனை தெரிவித்தனர். புதுக்கோட்டை மாவட்டத்தில் மட்டும் நாள்தோறும் 7,000 லிட்டர் பால் உற்பத்தி குறைந்துள்ளதாகப் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. கால்நடை வளர்ப்பை நம்பியுள்ள விவசாயிகளின் வாழ்வாதாரத்தைக் காக்க தமிழக அரசு உடனடியாகத் தலையிட வேண்டும் என விவசாயிகள் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து ள்ளனர். தலைமைச் செயலகத்தில், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான முனைவர் தொல். திருமாவளவன், குஜராத்திலுள்ளதேசியதடயஅறிவியல்பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் ஜே.எம். வியாஸ் மற்றும் உயர் அலுவலர்கள் சந்தித்துப் பேசினர். 2027 ஆம் ஆண்டு பொங்கல் பண்டிகைக்கு வழங்கப்படவுள்ள விலையில்லா வேட்டி, சேலைகளை உற்பத்தி செய்ய நிர்வாக அனுமதி வழங்கி, முன்பணமாக ரூ.300 கோடி ஒதுக்கீடு செய்து தமிழ்நாடு அரசு அரசாணை வெளியிட்டுள்ளது. இதன்மூலம் விலையில்லா வேட்டி, சேலை திட்டம் இந்த ஆட்சியிலும் தொடர்வது குறிப்பிட த்தக்கது தலைமைச் செயலகத்தில், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின்கீழ் செயல்படுத்தப்படும் திட்டங்கள் மற்றும் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

# தவெகவில் இணைந்த சி.விஜயபாஸ்கர், எம்.ஆர்.விஜயபாஸ்கர்; எடப்பாடி பழனிசாமி மீது அடுக்கடுக்கான குற்றச்சாட்டுகள்!



மாமல்லபுரம்: "தவெக உடன் கூட்டணி வைக்க வேண்டும்என்று தேர்தலுக்கு முன்பும், தேர்தலுக்குப் பின்பும் வலியுறுத்தினோம். ஆனால், அதிமுக தலைமை அதற்கு செவிமடுக்கவில்லை" என்று தவெகவில் இணைந்த சி.விஜயபாஸ்கர் குற்றம் சாட்டியுள்ளார்.

அதிமுக முன்னாள் அமைச்சர்கள் சி.விஜயபாஸ்கர், எம்.ஆர். விஜயபாஸ்கர் மற்றும் அவரது ஆதரவாளர்கள் தவெகவில் இணையும் விழா சென்னையை அடுத்த மாமல்லபுரத்தில் இன்று நடைபெற்றது. இதில், தவெக பொதுச் செயலாளரும், அமைச்சருமான ஆனந்த், அமைச்சர் செங்கோட்டையன், அமைச்சர் ஆதவ் அர்ஜுனா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

தொடக்க உரை நிகழ்த்திய செங்கோட்டையன், அனைவரையும் வரவேற்றுப் பேசினார். இதையடுத்து, தவெக பொதுச் செயலாளர் ஆனந்த், சி.விஜயபாஸ்கர் மற்றும் எம்.ஆர்.விஜயபாஸ்கர் ஆகிய இருவருக்கும் தவெக கட்சித் துண்டை அணிவித்து வரவேற்று வாழ்த்து தெரிவித்தார். மேலும், இவர்களோடு சேர்ந்து தவெகவில் இணைந்த அதிமுகவின் நிர்வாகிகள் பலருக்கும் தவெக துண்டை அணிவித்து ஆனந்த் வரவேற்றார். இணைப்பு விழாவில் உரையாற்றிய சி.விஜயபாஸ்கர், "புதுக்கோட்டை மாவட்ட மக்களின் கருத்துக்களின் அடிப்படையில் தவெகவில் இணையும் முடிவை நாங்கள் எடுத்துள்ளோம். தவெக உடன் கூட்டணி வைக்க வேண்டும் என்று, தேர்தலுக்கு முன்னதாகவே நாங்கள் எங்கள் தலைமையிடம் கடுமையாக வலியுறுத்தினோம். தலைமை செவி மடுக்கவில்லை. தேர்தலுக்குப் பின்னரும், தமிழக மக்கள் ஏகோபித்த ஆதரவை தவெகவுக்கு வழங்கி இருக்கிறார்கள். எனவே, நாம் தவெகவுக்கு ஆதரவு அளிக்க வேண்டும் என்று வலியுறுத்தினோம். அதற்கும் தலைமை செவி மடுக்கவில்லை.

எம்ஜிஆரால் தீய சக்தி என அடையாளம் காட்டப்பட்ட திமுகவோடு கூட்டு சேர்ந்து ஆட்சி அமைக்க எடப்பாடி பழனிசாமி முயன்றதில் எங்களுக்கு உடன்பாடு இல்லை. முதல் தேர்தலிலேயே ஒட்டுமொத்த இந்தியாவையும் திரும்பிப் பார்க்க வைத்து, தமிழகத்தின் அரசியல் திசையை தீர்மானித்து, அண்டை மாநிலங்களை அதிரவைத்திருக்கும் மக்கள் விரும்பிய மாற்றத்தின் சக்தி நமது முதல்வர் விஜய். தமிழக அரசியலில் சத்தமின்றி மவுனப் புரட்சியாக மாபெரும் அரசியல் புரட்சியை நிகழ்த்திய வர் விஜய். தமிழக மக்களை தனது நெஞ்சிலே குடியமர்த்தி இருக்கும் ஒரு தலைவரை நாம் பெற்றிருக்கிறோம்.

அத்தகைய தவெக குடும்பத்தில் நாங்கள் இன்று எங்களை இணைத்துக் கொண்டுள்ளோம். தமிழக மக்களின் கனவுக்கு இன்று ஒரு பாதை கிடைத்திருக்கிறது. எளிய மக்களின் குரலை செவி மடுக்க ஓர் இயக்கம் கிடைத்திருக்கிறது. நம் மண்ணுக்கும் மக்களுக்கும் சேவையாற்ற ஒரு களம் கிடைத்திருக்கிறது. மாற்றத்தை விரும்பிய ஒவ்வொரு மனசுக்கும் ஒருநம்பிக்கைகிடைத்திருக்கிறது. தொண்டர்களை தோழர்களாகக் கருதும் தலைமைப் பண்புள்ள ஒரு தலைமையை நாம் பெற்றிருக்கிறோம். அதனால், இந்த இணைப்பு மகிழ்ச்சியை, மலர்ச்சியை, நம்பிக்கையை, புத்துணர்ச்சியைக் கொடுக்கிறது.

தவெக வேறு; தமிழகம் வேறு அல்ல என்ற மக்களின் தீர்ப்பை மனதில் ஏந்தி, வர இருக்கும் எல்லா தேர்தல்களிலும் இனி தவெக வெற்றி பெறும். உறுதியான அந்த ஒற்றைத் தலைமையில் நாம் பயணித்து வெற்றி வாகை சூடுவோம். உங்களுக்கு துணை நிற்போம், உழைப்போம். எங்கள் உள்ளமெல்லாம் நிறைந்திருக்கும் இந்த நல்லாட்சி தொடர்ந்திட உழைத்திடுவோம்.

இங்கேநீங்கள்பார்ப்பது வெறும் ட்ரெயிலர்தான். மெயின் பிக்சரை டெல்டாவில் காட்டுவோம். தமிழகமே திரும்பிப் பார்க்கும் வகையில் மாபெரும் இணைப்பு விழாவை, இன்னொரு இணைப்பு விழாவை நாங்கள் அங்கு நடத்துவோம்" என தெரிவித்தார்.


## வரி விளம்பரங்கள்



தினத்தளம்
DHINATH DHALAM

| | | |
|---|---|---|
| மணமாலை | கோவில் திருவிழா | அரசியல் நிகழ்வுகள் |
| கல்வி | திருமண நாள் | பிறந்த நாள் |
| ஆண்டு விழா | திறப்பு விழா | வீட்டு சுப நிகழ்ச்சிகள் |
| நினைவு நாள் | ரியல் எஸ்டேட் | பைனான்ஸ் |
| நகைக்கடன் | வேலை வாய்ப்பு | ஆட்டோமொபைல் |

தொடர்புக்கு : ☎ +919444082959


# உருவானது புதிய காற்றழுத்த தாழ்வு பகுதி: கோவை, நீலகிரி, தேனிக்கு கனமழை வாய்ப்பு

சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: வடமேற்கு வங்கக்கடல் பகுதிகள் மற்றும் அதனை ஒட்டிய வடக்கு ஒடிசா கடலோர பகுதிகளின் மேல் நிலவும் வளிமண்டல சுழற்சியின் காரணமாக, வடமேற்கு வங்கக்கடல் மற்றும் அதனை ஒட்டிய வடக்கு ஒடிசா - மேற்கு வங்க கடலோர பகுதிகளின் மேல் ஒரு காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகியுள்ளது.




இதன் காரணமாக தமிழகத்தில் (ஜூலை 3) கோவை மாவட்டத்தின் மலைப்பகுதிகள், நீலகிரி மற்றும் தேனி மாவட்டங்களில் ஒரிரு இடங்களில் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய கனமழை பெய்யக்கூடும். இதர மேற்கு தொடர்ச்சிமலைமாவட்டங்கள் மற்றும் வட தமிழகத்தில் ஒரிரு இடங்களில் மிதமான மழையும், இதர தமிழகத்தில் ஒரிரு இடங்களிலும், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளிலும் லேசான மழை பெய்யக்கூடும்.

4-ம் தேதி கோவை, நீலகிரி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யக்கூடும். இதர மேற்கு தொடர்ச்சிமலைமாவட்டங்களில் ஓரிரு இடங்களில் மிதமான மழையும், இதர தமிழகத்தில் ஓரிரு இடங்களில் லேசான மழையும் பெய்யக்கூடும்.

5, 6 தேதிகளில் மேற்கு தொடர்ச்சிமலைமாவட்டங்களில் ஓரிரு இடங்களில் மிதமான மழையும், இதர தமிழகத்தில் ஓரிரு இடங்களில் லேசான மழையும் பெய்யக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். மாலை அல்லது இரவு நேரங்களில் நகரின் ஒருசில பகுதிகளில் இடி,மின்னலுடன்கூடிய லேசான அல்லது மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது.

தென்மேற்கு வங்கக்கடலின் சில பகுதிகள், மத்திய வங்கக்கடலின் சில பகுதிகள் மற்றும் அதனை ஒட்டிய தெற்கு வங்கக்கடல் பகுதிகளில் நாளை சூறாவளிக்காற்று மணிக்கு 45 முதல் 55 கி.மீ. வேகத்திலும், இடையிடையே 65 கி.மீ. வேகத்திலும் வீசக்கூடும். அந்தமான் கடல் பகுதிகள், ஆந்திரகடலோரப்பகுதிகள், மத்திய வங்கக்கடலின் பெரும்பாலான பகுதிகளில் சூறாவளி க்காற்று அதிகபட்சமாக மணிக்கு 60 கி.மீ. வேகத்திலும் வீசக்கூடும். எனவே இப்பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம்.

தமிழகத்தில் இன்று காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் பதிவான மழை அளவுகளின்படி அதிகபட்சமாக நீலகிரி மாவட்டம் அவலாஞ்சி, கோவை மாவட்டம் சின்னக்கல்லாரில் தலா 3 செமீ, உபாசி, சோலையார், சின்கோனா, வால்பாறையில் தலா 2 செமீ மழை பதிவாகியுள்ளது.


## செய்திகள்

உடனுக்குடன் படிக்க

தினத்தளம்
DHINATH DHALAM

வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்

Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/
CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

# தேசிய மருத்துவர்கள் தின விழா: வேப்பூரில் சாய் அப்போலோ நர்சிங் கல்லூரியில் கொண்டாட்டம்

கடலூர் மாவட்டம் வேப்பூரில் செயல்பட்டு வரும் சாய் அப்போலோ நர்சிங் கல்லூரியில் தேசிய மருத்துவர்கள் தினத்தை முன்னிட்டு மருத்துவர்கள்தினவிழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. கல்லூரி முதல்வர் அன்பரசி வரவேற்புரை வழங்கினார். கல்லூரியின் நிறுவனரும் இயக்குனருமான டாக்டர் ஏ.ஆர். தங்கதுரை தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், சிறப்பு விருந்தினர்களாக டாக்டர் சிவராமன், டாக்டர் மதன்குமார் மற்றும் டாக்டர் ராஜஸ்ரீ ஆகியோர் கலந்து கொண்டு, மருத்துவர்களின் சேவை மனப்பான்மை, அர்ப்பணிப்பு உணர்வு மற்றும் சமூக நலனில் அவர்கள் ஆற்றும் பங்கு குறித்து சிறப்புரையாற்றினர்.

இதனைத் தொடர்ந்து, நிகழ்ச்சியில் பங்கேற்ற மருத்துவர்களுக்கு பொன்னாடை அணிவித்து கௌரவிக்கப்பட்டது. நிகழ்ச்சியின் இறுதியில் கல்லூரியின் முதன்மை அலுவலர் ஆனந்த ஜோதி நன்றி கூறினார்.

இவ்விழாவில் கல்லூரி விரிவுரையாளர்கள் சுஷ்மிதா, அன்பரசி, நளினி, பிரேமா, ராதா, கனிமொழி, செல்வமணி, தீபா, அம்சராணி, கல்லூரி மேலாளர் பிரவீன் குமார் மற்றும் மாணவ, மாணவிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



# 35 ஆண்டு கால தற்காப்புக்கலை சேவை: ஈரோடு கராத்தே மாஸ்டர் எம்.குமாருக்கு 50வது பிறந்தநாள் வாழ்த்துக்கள்



ஈரோடு மாவட்ட ஸ்போர்ட்ஸ் கராத்தே டோ அசோசியேஷன் ஈரோடு மாவட்ட செயலாளர் ஷிகான் எம்.குமார் தனது 50-வது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

பொன்விழா ஆண்டு பிறந்தநாள் காணும் அவருக்கு, தமிழ்நாடு மாநில செயலாளர் அல்டாப்ஆலம்வாழ்த்து தெரிவித்துள்ளார்.

கடந்த 35 ஆண்டுகள் கராத்தே கலையில் மிகச்சிறந்த அனுபவம் கொண்ட இவர், இதுவரை 400-க்கும் மேற்பட்டமாணவ,மாணவிகளுக்கு கராத்தே பயிற்சி அளித்து சிறந்த வீரர்களாக உருவாக்கியுள்ளார்.

வெறும் வணிக நோக்கமாக இல்லாமல், சமூக அக்கறையோடு கடந்த 10 வருடங்களாக, பெற்றோரை இழந்து தவிக்கும் மற்றும் பொருளாதாரத்தில் சிரமப்படும் 40-க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகளுக்கு தொடர்ந்து கட்டணமில்லாமல் இலவசமாக கராத்தே பயிற்சி அளித்து வருகிறார்.

50-வது பிறந்தநாளைக் காணும் வேளையில், மாநில மற்றும் தேசிய அளவில் நடைபெறும் கராத்தே போட்டிகளில் ஈரோடு மாவட்டத்தைச்சேர்ந்தமாணவ, மாணவிகள் பெருமளவில் கலந்து கொண்டு கோப்பைகளையும், பரிசுகளையும் வென்று சாதனை படைக்க வேண்டும் என்றும், அரசு மற்றும் தனியார் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவிகளுக்கு கராத்தே பயிற்சியைக் கட்டாயமாக்க வேண்டும்என்றும்அவர்தெரிவித்துள்ளார்.

மேலும்,சமுதாயத்தில் பெண் குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்ய, ஒவ்வொரு பெற்றோரும் தங்களது பெண் குழந்தைகளுக்கு கராத்தே பயிற்சியைக் கட்டாயம் கற்றுக் கொடுக்க வேண்டும் என்றும், பெண்களுக்கு ஏதேனும் அசம்பாவிதங்களோ அல்லது தொந்தரவுகளோ ஏற்படும் போது, தற்காப்பு முறையில் தங்களை முதலில் காப்பாற்றிக் கொள்ள கராத்தே கலை கண்டிப்பாக உதவும் என்றும் தனது சமூகக் கருத்தை முன்வைத்துள்ளார்.

தலைசிறந்த கராத்தே பயிற்றுவிப்பாளராகவும், சமூக நலன் விரும்பியாகவும் விளங்கும் ஷிகான் எம்.குமார் அவர்களின் 50-வது பிறந்தநாளில், அவரது அனைத்து லட்சியங்களும் எதிர்கால ஆசைகளும் நிறைவேற மனமார்ந்த வாழ்த்துக்கள்

# பெண்ணாடம் அரசு மருத்துவமனையில் மருத்துவர்கள் தின விழா கொண்டாட்டம்



கடலூர் மாவட்டம் பெண்ணாடம் அரசு மருத்துவமனையில் மருத்துவர்கள் தினத்தை முன்னிட்டு பெண்ணாடம் அரிமா சங்கம் சார்பில் மருத்துவர்களுக்கு வாழ்த்து தெரிவிக்கும் நிகழ்வு பெண்ணாடம் அரிமா சங்கத் தலைவர் ரா. பாண்டியன் தலைமையில் நடைபெற்றது.

அரசு மருத்துவர்களான டாக்டர் நித்ய பாரதி, டாக்டர் சரண்யா மற்றும் டாக்டர் மணிவண்ணன் ஆகியோருக்கு அரிமா சங்க நிர்வாகிகள் மருத்துவர்தின வாழ்த்துக்களை தெரிவித்து மகிழ்ந்தனர். மேலும், மருத்துவர்கள் தினசேவைத்திட்டத்தின் ஒரு பகுதியாக பெண்ணாடம் அரிமா சங்கம் சார்பில் இரண்டு இதயத் துடிப்புக் கேட்புக் கருவிகள் (ஸ்டெதஸ்கோப்) பெண்ணாடம் அரசு மருத்துவமனைக்கு வழங்கப்பட்டன. இக்கருவிகளை பெண்ணாடம் ஜே.பி. பல் மருத்துவமனையின் மருத்துவர் ஜெயபிரகாஷ் நன்கொடையாக வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் சாசனத் தலைவர் மு. ஞானப்பிரகாசம், மாவட்ட அவைப் பொருளாளர் லயன் டி.வி. கே.வி. சக்திவேல், மாவட்டத் தலைவர் லயன் சிவப்பிரகாசம், சங்க இயக்குநர் ஆனந்தன், துணைத் தலைவர் பாலசுப்ரமணியம், பொருளாளர் கணேஷ், முன்னாள் செயலாளர் அழகு வேலன் மற்றும் கௌதம் உள்ளிட்டோர் கலந்து கொண்டு மருத்துவர்களுக்கு வாழ்த்துகளைத் தெரிவித்தனர்.

# தூத்துக்குடி மாவட்ட புதிய செய்தி மக்கள் தொடர்பு அலுவலராக பெ.சா. கருப்பணராஜவேல் பொறுப்பேற்றுக் கொண்டார்

தூத்துக்குடி மாவட்ட புதிய செய்தி மக்கள் தொடர்பு அலுவலராக பணியாற்றி வந்த நவீன் பாண்டியன் சமீபத்தில் பணியிட மாற்றம் செய்யப்பட்டார். இந்த நிலையில், புதிய அலுவலராக பெ.சா. கருப்பணராஜவேல் இன்று பொறுப்பேற்றுக் கொண்டார். தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள செய்தி மக்கள் தொடர்பு அலுவலகத்தில் பதவியேற்பு நிகழ்வு நடைபெற்றது. இதில் பெ.சா. கருப்பணராஜவேல் கோப்புகளில் கையெழுத்திட்டுத்தனது புதிய பொறுப்பினை அதிகாரப்பூர்வமாக ஏற்றுக்கொண்டார்.

தூத்துக்குடி மாவட்டத்தின் அரசு நலத்திட்ட உதவிகள், மாவட்ட நிர்வாகத்தின் அதிகாரப்பூர்வ அறிவிப்புகள் மற்றும் செய்திகளைப் பொதுமக்கள் மற்றும் ஊடகங்களுக்குத் துல்லியமாகவும் வேகமாகவும் கொண்டு சேர்க்கும் முக்கியப் பொறுப்பை இவர் இனி கவனிப்பார்.



இவர் பொறுப்பேற்றுக் கொண்டதைத் தொடர்ந்து, மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலக ஊழியர்கள், பத்திரிகையாளர்கள் மற்றும்ஊடகப்பிரிவினர் தங்களது வாழ்த்துகளைத் தெரிவித்து வருகின்றனர்.



# ஸ்ரீ ஐயப்பா பாலிடெக்னிக் கல்லூரியில் மாணவர்களுக்கு பாராட்டு மற்றும் துவக்க விழா

கடலூர் மாவட்டம் வேப்பூர் அடுத்துள்ள ஜவதுகுடியில் இயங்கி வரும் ஸ்ரீ ஐயப்பா மற்றும் ஐயப்பா பாலிடெக்னிக் கல்லூரியில், முதலாம் மற்றும் நேரடி இரண்டாம் ஆண்டு மாணவர்களுக்கான வகுப்புகள் துவக்க விழா மற்றும் மாநில அளவில் சாதனைபடைத்த மாணவர்களுக்கு பாராட்டு விழா நேற்று கல்லூரி வளாகத்தில் கோலாகலமாக நடைபெற்றது.

மாணவர்களின் வெற்றியே!எங்களின்வெற்றி!" என்ற தாரக மந்திரத்துடன் செயல்படும் இக்கல்லூரியில் நடைபெற்ற இவ்விழா, தமிழ்த்தாய் வாழ்த்துடன் தொடங்கியது. கல்லூரி நிர்வாக அறங்காவலர்கள், ஆலோசகர்கள், முதல்வர், பெற்றோர்கள் மற்றும் மாணவர்கள் இணைந்து குத்துவிளக்கேற்றி நிகழ்ச்சியைத் தொடங்கி வைத்தனர்.

ஐயப்பா பாலிடெக்னிக் கல்லூரியின் முதல்வர் திரு. எஸ். வெங்கடேசன் வரவேற்புரையாற்றினார். பின்னர் நிர்வாகத்தினர், ஆலோசகர்கள் மற்றும் முதல்வர் ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர். ஸ்ரீ ஐயப்பா கல்வி அறக்கட்டளையின் நிர்வாக அறங்காவலர்கள் திரு. பி. ராஜேந்திரன் மற்றும் திரு. ஆர். சரவணன் ஆகியோர் விழாவிற்குத் தலைமை தாங்கி, சிறப்புரையாற்றினர்.

இந்த விழாவின் முக்கிய நிகழ்வாக, கடந்த ஏப்ரல் 2026-ல் நடைபெற்ற டிப்ளமோ வாரியத் தேர்வில் மாநில அளவில் சிறப்பிடம் பெற்று சாதனை படைத்த மாணவ, மாணவிகளுக்கும், அவர்களின் வெற்றிக்கு உறுதுணையாக இருந்த ஆசிரியப் பெருமக்களுக்கும் பரிசுகள் வழங்கி பாராட்டு தெரிவிக்கப்பட்டது.

ஸ்ரீ ஐயப்பா கல்வி அறக்கட்டளையின் ஆலோசகர்கள் திரு. எஸ். பாலகிருஷ்ணன், திரு. பி. குமார் மற்றும் ஐயப்பாபொறியியல் கல்லூரியின் ஆலோசகர் முனைவர் புனிதவதி மோகன் ஆகியோர் கலந்துகொண்டு, சாதனைபடைத்த மாணவர்களை வாழ்த்திப் பேசினர்.

நிறைவாக, ஸ்ரீ ஐயப்பா பாலிடெக்னிக் கல்லூரியின் துறைத்தலைவர் பத்மநாபன் நன்றியுரை வழங்கினார். ஒருங்கிணைப்பாளர்கள் செந்தாமரைக்கண்ணன், ராஜாராமன் ஆகியோர் விழாவை சிறப்பாக ஒருங்கிணைத்து நடத்தினர்.

# பள்ளிகளில் குழந்தை திருமண விழிப்புணர்வு நிகழ்ச்சி



கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை வட்டத்தில் உள்ள பல்வேறு அரசுப் பள்ளிகளில், "பெண் குழந்தைகளை காப்போம் பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம்" திட்டத்தின் கீழ், குழந்தை திருமணம் மற்றும் இளம் வயது கர்ப்பம் தடுத்தல் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட சமூகநல அலுவலர் ஆகியோரின் அறிவுரையின்படி, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில் இந்நிகழ்ச்சி ஒருங்கிணைக்கப்பட்டது.உளுந்தூர்பேட்டை வட்டத்திற்குட்பட்ட வெள்ளையூர் அரசு மேல்நிலைப் பள்ளி, மு.குன்னத்தூர் அரசுமேல்நிலைப்பள்ளி மற்றும் கிளியூர் அரசு மேல்நிலைப்பள்ளி ஆகிய மூன்று பள்ளிகளில் இந்த விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டன.

மாவட்ட மகளிர் அதிகார மையத்தின் மாவட்ட திட்ட ஒருங்கிணைப்பாளர் அய்யாதுரை அவர்கள் கலந்துகொண்டு பெண் கல்வியின் முக்கியத்துவம் குறித்தும், குழந்தை திருமணத்திற்கு எதிரான சட்டங்கள் குறித்தும் விரிவாகப் பேசினார். களமருதூர் காவல் நிலைய உதவி ஆய்வாளர் சேட்டு மற்றும் காவலர்கள் கலந்துகொண்டு, பெண் குழந்தைகளின் பாதுகாப்பு மற்றும் அவசர உதவி எண்கள் (Childline 1098/181)குறித்துவிழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

மேலும், அரசு ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவர் கதிரவன், சுகாதார ஆய்வாளர் மற்றும் செவிலியர்கள் கலந்துகொண்டு இளம் வயது கர்ப்பத்தினால் ஏற்படும் உடல்நல பாதிப்புகள் மற்றும் ஊட்டச்சத்தின் அவசியம் குறித்து மாணவிகளுக்குஆலோசனைகளை வழங்கினர்.

இந்நிகழ்ச்சியில் அந்தந்த பள்ளிகளின் தலைமை ஆசிரியர்கள், ஆசிரியர்கள், மாணவிகள் மற்றும் மாவட்ட மகளிர் அதிகார மைய பணியாளர்கள் விக்கி, செல்வி உள்ளிட்ட பலர் திரளாகக் கலந்துகொண்டனர்

# இன்றைய சமுதாயத்தில் குழந்தைகளை, குழந்தைகளின் பெற்றோர்களே அலைபேசியை வழங்கி அவர்களை கெடுத்து விடுகின்றனர்

## கோவை சூலூர் பகுதியில் உள்ள எல்.ஜி. மருத்துவமனை குழந்தைகள் நல மருத்துவர் பேச்சு



கோவை சூலூர் பகுதியில் கடந்த 5 ஆண்டுகளாக இயங்கி வரும் எல்ஜி மருத்துவமனையில் இன்று மருத்துவர்கள் தினம் அனுசரிக்கப்பட்டது. எல்ஜி மருத்துவமனையின் நிர்வாக இயக்குநர் லதா கோபிநாத் தலைமை தாங்கினார். இதில் மருத்துவர்கள் தினத்தை கொண்டாடும் வகையில், கேக் வெட்டி கொண்டாடப்பட்டது.

மருத்துவமனையில் பணியாற்றும் செவிலியர்கள், மருத்துவர்கள் முன்னிலையில் குழுவாக இணைந்து கேக் வெட்டி அனைவருக்கும் வழங்கி கொண்டாட பட்டது. இதனை தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்து பேசிய எல்ஜி மருத்துவமனையின் நிர்வாக இயக்குநர் லதா கோபிநாத் கூறியதாவது..

ஜூலை 01, உலக மருத்துவர்கள் தினம், இன்றைந நாளில் அனைத்து துறை மருத்துவர்களுக்கும் எனது வாழ்த்துக்களை தெரிவித்து கொள்கிறேன். ஆண்டு தோறும் ஜூலை 01 ம் தேதியில், ஒவ்வொரு கருப்பொருளை முன்வைத்து மருத்துவர்கள் தினம் கொண்டாட பட்டு வருகின்றது இந்த ஆண்டு, மருத்துவர்களின் உடல் நிலையை பேணி காக்க வேண்டும் என்ற கரு பொருளின் கீழ் இந்த நாள் இந்தியா முழுவதும் கொண்டாட பட்டு வருகின்றது. இந்த நாளில் மருத்துவர்கள் தங்களது உடல்நிலையை பேணி காப்பது, மிகவும் அவசியம், குறிப்பாக மருத்துவர்கள் குழுவாக இணைந்து செயல்பட்டால் மட்டுமே மருத்துவர்களின் உடல்நிலையை காக்க முடியும், என தெரிவித்தார். குறிப்பாக டிஜிட்டல் உலகில் நாம் வாழ்ந்து வருகின்றோம் இன்றைய நாளில் அலைபேசியில் செயல் பாடுகள் அளப்பரியது, அதன் தேவைகளை மட்டும் பயன்படுத்தி கொள்ள வேண்டும் அதில் மூல்கி விட கூடாது என்றார்.

இதனை தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய குழந்தைகள் நல மருத்துவர் டாக்டர் மனோ பாரதி கூறுகையில், இன்றைய உலகில் உள்ள, அனைத்து குழந்தைகளையும் குழந்தைகளின் பெற்றோர்களே கெடுத்து விடுகின்றார். உணவு ஊட்டுவதற்க்கு கூட செல்போன்களை குடுத்து விடுகின்றனர். இது மிக பெரிய தவறான செயல் இதனால் குழந்தையின் கவனம் முழுவதும் செல்போனில் தான் இருக்குமே தவிர, உணவின் மீது இருக்காது இது குழந்தையின் வளர்ச்சி மட்டுமின்றி,குழந்தையின் மனநிலையையும் பாதிக்கும் என்று எச்சரிக்கை செய்தார் என்பது குறிப்பிடத்த க்கது.



ஈரோடு மாவட்டம் சென்னிமலை மழை மீது உள்ள முருகன் கோவில் சன்னதி தென்புறம் அமைந்துள்ள மார்க்கண்டேஸ்வரர் சன்னதி குரு தட்சிணாமூர்த்திக்கு நேற்று வியாழக்கிழமையை முன்னிட்டு சிறப்பு பூஜை நடைபெற்றது. காலை சிறப்பு அபிஷேகம் மற்றும் அலங்காரம் தீபாரதனை நடைபெற்றது. இதில் ஏராளமானோர் கலந்து கொண்டு குரு தட்சிணாமூர்த்தியை வழிபாடு செய்தனர். மேலும் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

# தூத்துக்குடி மேல சண்முகபுரம் ஸ்ரீமுத்துமாரியம்மன் திருக்கோவிலின் கொடை விழா

## 8ம் நாள் அலங்கார திருவிழா வெகுவிமரிசையாக நடைபெற்றது



தூத்துக்குடி மேலச்சண்முகபுரம்,வண்ணார் 3ம் தெரு தொடர்ச்சி பகுதியில் அமைந்துள்ள புகழ்பெற்ற அருள்மிகு ஸ்ரீமுத்துமாரி அம்மன் கோவில் கொடைவிழா வெகு சிறப்பாக கடந்த 23ஆம் தேதி கால் நாட்டு விழாவுடன் துவங்கிதிருவிழா 9 நாட்கள் நடைபெற்றது. இதில் தினமும் அம்மனுக்கு சிறப்பு அலங்காரமும் சிறப்புப் பூஜைகளும், தீபாரா தனைகளும் நடைபெற்றது. 8ஆம் நாள் கொடைவிழாவை முன்னிட்டு காலை 8.00 மணிக்கு அருள்மிகு கன்னி விநாயகர் கோவிலில் இருந்து பக்தர்கள் 100மேற்பட்டோர் பால்குடம் எடுத்து தெரு வீதியாக ஶ்ரீ முத்துமாரி அம்மன் கோவில் வந்தனர். பின்னர் காலை 10.00 மணி அளவில் அம்மன் மற்றும் பரிவார சுவாமிகளுக்கு சிறப்பு அபிஷேக ஆராதனை 12 மணிக்கு அம்மனுக்கு சிறப்பு மதிய கொடை பூஜை நடைபெற்றது. தொடர்ந்து மதியம் 12.30 மணி அளவில் தூத்துக்குடி மாநகராட்சி மேயா் ஜெகன் பொியசாமி கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்து அன்னதானத்தை தொடங்கி வைத்தாா். இதில் 2000 மேற்பட்ட ஏராளமான பக்தர்களுக்கு கலந்து கொண்டனர். மாலை 5 மணிக்கு அம்மன் மற்றும் பரிவாரதெய்வங்கள் ஊர் சுற்றி வந்தனர்.

இரவு 7.00 மணிக்கு சிலம்பு கண்ணன் சொற்பொழிவு நிகழ்ச்சி இரவு 9 மணிக்கு 200 மேற்பட்டோர் முளைப்பாரி, மாவிளக்கு எடுத்து தெரு வீதியாக ஊர் சுற்றி வந்தனர். இரவு 12. மணி அளவில் சாம கொடை நடைபெற்றது. ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு ஸ்ரீ முத்துமாரி அம்மனின் அருள் பெற்றனர். கோவில் விழா ஏற்பாடுகளையும் கோவில் தலைவர் மற்றும் தர்மகர்த்தா கோட்டுராஜா தலைமையில் மேற்கு மண்டலத்தலைவா் அன்னலட்சுமி முன்னிலையில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் கோவில் நிர்வாகிகள், கொடைவிழா ஆலோசகர்கள், இளைஞர் அணி & மகளிர் அணியினர் கொடைவிழா குழுவினர் பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# தண்டலம் ஊராட்சி கிராம மக்கள் முயற்சியில் குப்பை கழிவுகள் சீரமைப்பு செய்து கரைகளை பலப்படுத்தி தெப்பஉற்சவம்



செங்கல்பட்டு மாவட்டம் திருப்போரூர் அடுத்த தண்டலம் ஊராட்சியில் அமைந்துள்ள சத்திரம் குலம் என்பது மிகவும் பழமை வாய்ந்தது,

தண்டலம் மற்றும் திருப்போரூர் உள்ளிட்ட கிராமமக்கள் அக்குளத்தில் தண்ணீரை குடிப்பதற்கு பயன்படுத்தி வந்தனர் சுமார் 20 ஆண்டுகளுக்கு மேலாக குளக்கரை சீரமைக்க ப்படாமல் குளத்தின் கரைகள் மீது மது பிரியர்கள் மது அருந்தி செல்வதால் குளக்கரை சுற்றி குப்பை கழிவுகள், பிளாஸ்டிக் கழிவுகள் மற்றும் குளத்தில் பிளாஸ்டிக் கழிவுகள் சூழ்ந்து குளற்று நீர் துர்நாற்றம் வீசியது,

தண்டலம் கிராம மக்கள் வேண்டுதலுக்கு இணங்க தண்டலம் ஊராட்சி மன்ற தலைவர் ஆனந்தன், ஏற்பாட்டில் கிராம மக்கள் உதவியோடு குளக்கரையை வலுப்படுத்தி, குளத்து நீரில் உள்ள குப்பைகழுவுகளை அப்புறப்படுத்தி தூய்மைப்படுத்தப்பட்டது,

பின்னர் குளக்கரை மீது அமைந்துள்ள ஸ்ரீ கங்கையம்மன் ஆலயத்தை புறநமைக்கப்பட்டு முதலாம் ஆண்டு கூழ் வத்தல் திருவிழாவுடன் தெப்ப திருவிழா வெகு விமர்சையாக நடைபெற்றது,

இதில் தண்டலம் ஊராட்சி கிராம மக்கள் திரளானோர் கலந்து கொண்டு கங்கை அம்மன் வேண்டி வழிபாடு செய்தனர்,

பூக்களால் அலங்கரிக்கப்பட்ட கங்கை அம்மனை சத்தர குளத்தில் மூன்று சுற்று வலம்வந்து பக்தர்களுக்கு காட்சியளித்தது இதில் பக்தர்கள் வெற்றிலையில் குளத்தில் கற்பூரம் ஏந்தி வழிபாடு செய்தனர்.

இறுதியில் கங்கை அம்மன் திரு வீதி உலா நடைபெற்றது,



ஈரோடு மாவட்டம், அம்மாபேட்டை வட்டாரம், பூனாச்சி கிராமத்தில் வேளாண்மை உழவர் நலத்துறை மூலம் தமிழ்நாடு நீர்வள நிலவள திட்டத்தின் கீழ் ரூ. 40,000/ மானிய விலையில் விவசாயிக்கு விநியோகம் செய்யப்பட்ட விசை களையெடுக்கும் கருவியை (POWER WEEDER) மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (02.07.2026) பார்வையிட்டு, கள ஆய்வு செய்தார்.

# மத்தூர் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் மாதிரி மாணவர் பேரவைத் தேர்தல்: மாணவிகள் ஆர்வமுடன் வாக்களிப்பு



கிருஷ்ணகிரி மாவட்டம் மத்தூர் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் 2026-27ஆம் கல்வியாண்டிற்கான மாணவர் பேரவைத் தேர்தல் மற்றும் பதவியேற்பு விழா மிகச் சிறப்பான முறையில் நடைபெற்றது.

மக்களாட்சியின் மாண்பையும், தேர்தல் முறைகளையும் மாணவிகள் நடைமுறையில் அறிந்துகொள்ளும் வகையில் இத்தேர்தல் நடத்தப்பட்டது. இதற்காக, முறையாக தேர்தல் அறிவிப்பு வெளியிடப்பட்டு, வேட்புமனு தாக்கல், வேட்புமனு பரிசீலனை மற்றும் விலக்கல், இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியீடு என உண்மையான தேர்தலைப் போன்றே அனைத்து நடைமுறைகளும் மிகத் துல்லியமாகப் பின்பற்றப்பட்டன.

இத்தேர்தலில் சாக்பீஸ், பென்சில், அழிப்பான், அளவுகோல் என நான்கு அணிகளாகப் பிரிந்து மாணவிகள் போட்டியிட்டனர். ஆசிரியர்கள் குழுவின் வழிகாட்டுதலின்படி, வேட்பாளர்கள் வகுப்பு வாரியாகச் சென்றும், பொதுப் பிரச்சாரக் கூட்டங்கள் வாயிலாகவும் தீவிர வாக்குச் சேகரிப்பில் ஈடுபட்டனர்.

கல்விச் சுற்றுலா, புத்தகமில்லா நாள், வகுப்பு தோறும் கடிகாரம் மற்றும் கிரீன் போர்ட் வசதி, தடையற்ற குடிநீர் மற்றும் சுத்தமான கழிவறை வசதிகள், போன்ற மாணவிகளின் அத்தியாவசியத் தேவைகளை உள்ளடக்கிய வாக்குறுதிகள் வாக்காளர்களான மாணவிகளைப் பெரிதும் கவர்ந்தன.

வாக்குப்பதிவு நாளன்று, பள்ளி மாணவிகள் அனைவரும் தங்களின் அடையாளச் சான்றுகளுடன் வந்து மிக நீண்ட வரிசையில் நின்று ஆர்வத்துடன் வாக்களித்தனர். தேர்தல் நடத்தும் அலுவலர் (PO), உதவி அலுவலர்கள் (PO I, II, III) மற்றும் வேட்பாளர்களின் முகவர்கள் (Agents) முன்னிலையில் வாக்குப்பதிவு நடைபெற்றது. நவீன தொழில்நுட்பத்தைப் புகுத்தும் வகையில், டேப்லெட் கணினி மூலம் EVM (மின்னணு வாக்குப்பதிவு) முறையில் வாக்குகள் பதிவு செய்யப்பட்டன. வாக்கு எண்ணிக்கைக்குப் பிறகு தேர்தல் முடிவுகள் முறையாக அறிவிக்கப்பட்டன. தொடர்ந்து, பள்ளியில் நடைபெற்ற "நாடாளுமன்ற நாள்" நிகழ்வில், வெற்றி பெற்ற மாணவிகளுக்குப் பதவியேற்பு விழா நடைபெற்றது. பள்ளித் தலைமையாசிரியை ஆனந்திமாலா மாணவிகளுக்குப் பதவிப் பிரமாணமும், ரகசியக் காப்பு உறுதிமொழியும் செய்து வைத்தார். இந்நிகழ்வில் பெற்றோர் ஆசிரியர் கழக (PTA) நிர்வாகிகள், பள்ளி மேலாண்மைக் குழு (SMC) உறுப்பினர்கள், சமூக ஆர்வலர்கள் மற்றும் பெற்றோர்கள் கலந்துகொண்டு மாணவிகளை வாழ்த்தினர். இத்தேர்தலைத் தலைமைத் தேர்தல் அதிகாரியாக இருந்து மிகச் சிறப்பாகவழிநடத்திய உதவித் தலைமையாசிரியர் கணேஷ் மற்றும் ஆசிரியர் குழுவினருக்குப் பொதுமக்கள் தங்களது பாராட்டுகளைத் தெரிவித்தனர்.

கடந்த 5 ஆண்டுகளாக இப்பள்ளியில் இந்த மாதிரித் தேர்தல் வெற்றிகரமாக நடத்தப்பட்டு வருகிறது. கடந்த 2023-2024ஆம் கல்வியாண்டில் தேர்வு செய்யப்பட்ட மாணவர் பேரவை உறுப்பினர்கள் 35 பேர் தமிழ்நாடு சட்டமன்றக் கூட்டத்தொடரைக் காண நேரில் அழைத்துச்செல்லப்பட்டதை விழாவில் பெருமையுடன் நினைவு கூர்ந்தனர். இந்த ஆண்டு தேர்வு செய்யப்பட்டுள்ள மாணவிகள் புது தில்லியில் உள்ள நாடாளுமன்றத்திற்கு அழைத்துச் செல்லப்படவுள்ளதாகப் பள்ளி நிர்வாகம் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

பள்ளியின் இந்தத் தனித்துவமான முயற்சி, எதிர்காலத் தூண்களான மாணவிகளிடையே அரசியல் விழிப்புணர்வையும், மக்களாட்சி அமைப்பின் மீதான நம்பிக்கையையும், தலைமைப் பண்பையும் விதைத்துள்ளது என சமூக ஆர்வலர்கள் நெகிழ்ச்சியுடன் தெரிவித்தனர்.

# ஒரே பணியிடத்தில் மூன்று ஆண்டுகள் பணியாற்றும் பள்ளிப் பணியாளர்களுக்கு கட்டாயப் பணி மாறுதலிலிருந்து விலக்கு அளிக்க வேண்டும்

## அமைச்சர் ஆ.ராஜ்மோகனுக்கு தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நலக் கூட்டமைப்பின் நிறுவனத் தலைவர் சா.அருணன் கோரிக்கை



பள்ளிக்கல்வித்துறையில் பணியாற்றும் ஆசிரியர் அல்லாத பணியாளர்கள், ஒரே பணியிடத்தில் மூன்று ஆண்டுகள் பணியாற்றினால் கட்டாயப் பணி மாறுதல் வழங்க வேண்டும் என்பது விதியாகும். அந்த வகையில் ஆண்டுதோறும் இயக்குநரகம் முதற்கொண்டு மேல்நிலை மற்றும் உயர்நிலைப் பள்ளிகள் வரை, மூன்று ஆண்டுகள் ஒரே பணியிடத்தில் பணியாற்றும் பணியாளர்களுக்கான கலந்தாய்வு இந்த ஆண்டு நடைபெற உள்ளது. இந்த மாறுதல் கலந்தாய்வில், உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் பணியாளர்களுக்கு "மூன்றாண்டுகள் பணி முதிர்வு" என்ற விதியிலிருந்து விலக்களித்து, 'விருப்பமுள்ளவர்கள் மட்டும் மாறுதல்பெறலாம்' என்ற விதியை ஏற்படுத்த வேண்டும்.

அரசுத் திட்டங்களை மாணவர்களுக்குப் பல வழிகளில் கொண்டு சேர்ப்பதிலும், மாணவர்களின் அனைத்துத் தரவுகளையும் (Data) கட்டமைப்பதிலும் இப்பணியாளர்கள் பெரும்பங்காற்றி வருகின்றனர். எனவே, மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை இவர்களைப் பணிமாறுதல் செய்வதால், அடுத்துப் பணியில் சேருபவர்கள் அந்தப் பணிகளைத் தொடர்வதில் பெரும் சிரமம் ஏற்படுகிறது. இதனால் மாணவர்களுக்கான நலத்திட்டங்களைச் செயல்படுத்துவதிலும், அவர்களின் தரவுகளைக் கண்காணிப்பதிலும் தொய்வு ஏற்படுகிறது. ஆதலால், மாணவர்களின் நலன் கருதிப் பள்ளிகளில் பணியாற்றும் பணியாளர்களுக்கு, "மூன்றாண்டுகள் பணியாற்றினால் கட்டாயப் பணியிட மாற்றம்" என்ற விதியிலிருந்து விலக்களிக்க வேண்டும்.

கடந்த 2021-ஆம் ஆண்டு பள்ளிக்கல்வித்துறை மற்றும் தொடக்கக்கல்வித்துறைகளில் பணியாற்றும் அனைத்து வகை ஆசிரியர்களும், மலைப் பகுதிகளில் தங்கள் சுயவிருப்பத்தின் பேரில் மூன்று ஆண்டுகள் பணியாற்றினால், அதற்குப் பிறகு நடைபெறும் பொது மாறுதல் கலந்தாய்வில் முன்னுரிமைப் பட்டியலில் சேர்க்கப்பட்டு முன்னுரிமை வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது. அதன்படி சென்ற ஆண்டு முன்னுரிமைப் பட்டியலில் இடம்பெற்றுப்பணியிட மாறுதலும் பெற்றார்கள். ஆனால், இந்த ஆண்டு மலைப் பகுதியில் பணியாற்றும் ஆசிரியர்களுக்குப் பணி மாறுதல் பெறுவதற்கான முன்னுரிமை வழங்கப்படவில்லை. எனவே, அதனைப் பரிசீலித்து மீண்டும் அவர்களை முன்னுரிமைப் பட்டியலில் சேர்க்க வேண்டும்.

மேற்கண்ட கோரிக்கைகளைப் பரிசீலனை செய்து விரைந்து நிறைவேற்றிட மாண்புமிகு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் ஆ.ராஜ்மோகன் அவர்களையும், பள்ளிக்கல்வித்துறை முதன்மைச் செயலாளர் மதிப்புமிகு சந்திரமோகன் அவர்களையும், பள்ளிக்கல்வித்துறை இயக்குநர் மதிப்புமிகு முனைவர் ச.கண்ணப்பன் அவர்களையும், தொடக்கக்கல்வித்துறை இயக்குநர் மதிப்புமிகு முனைவர் பூ.ஆ.நரேஷ் அவர்களையும் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். சா.அருணன் நிறுவனத் தலைவர் தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நலக் கூட்டமைப்பு

# திருப்பூர் மாவட்டம் உடுமலைப்பேட்டை வல்லகுண்டபுரம் பகுதியில் நடைபெற்ற நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா

## தமிழக முற்போக்கு மக்கள் கட்சியின் மாநில துணை தலைவர் வழக்கறிஞர் புஸ்பாணந்தம் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்

திருப்பூர் மாவட்டம், உடுமலை பேட்டை பகுதியில் உள்ள வல்ல குண்டா புரம், பகுதியில் ஜே.எம்.எஸ். அறக்கட்டளை செயல்பட்டு வருகிறது. இந்த அறக்கட்டளையின் சார்பாக வல்லகுண்டபுரம் பகுதியில் உள்ள இயேசு என் மேய்ப்பர் ஆலயத்தில் நலத்திட்டங்கள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்தவிழாவில் தமிழக முற்போக்கு மக்கள் கட்சியின் மாநில துணை தலைவரும், வழக்கறிஞருமான புஸ்பாணந்தம் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.



இதில் மாற்றுத்திறனாளிகள், கணவனை இழந்தவர்கள், தாய் தந்தையரை இழந்த குழந்தைகள், ஆண்கள், பெண்கள் என சுமார் 220 நபர்களுக்கு உடைகள், மற்றும் உணவு, நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது. ஆண்கள், பெண்கள் வயதானவர்கள், இரண்டு கண்களும் தெரியாதவர்கள், தாய் தந்தையரை இழந்த குழந்தைகள், இவர்களுக்கு தொடர்ச்சியாக மாதாமாதம் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றது. இந்த மாதத்திற்கான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது. மேலும் மூன்று மாதத்திற்கு ஒரு முறை ஆடைகள் முடி வெட்டுதல், உடல் நலத்துக்கான பரிசோதனைகள், வழங்கப்பட்டு வருகின்றது. மேலும் கிராமப்புறங்களில் சுற்றுச்சூழலை குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் நிகழ்ச்சி, கணவனை இழந்த பெண்களுக்கு தையல் மிஷின், இஸ்திரி பெட்டிகள், மற்றும் சிறு தொழில் முனைர்களுக்கான வழிமுறைகள் வழங்கப்பட்டது. கணவனை இழந்த பெண்களின் குழந்தைகளுக்கு படிப்பு, மற்றும் அதை சார்ந்த உதவிகள் செய்து வழங்கப்பட்டது. ஏழைத் தொழிலாளர்களுக்கு, இலவசமாக 25 தொழில்களுக்கு நலவாரிய பதிவு செய்து தரப்பட்டது. இந்த நிகழ்ச்சியில்

ஜேஎம்எஸ் அறக்கட்டளையின் நிறுவனர் வி.

பால் பழனிசாமி, நிர்வாக குழு உறுப்பினர்கள் நாச்சி முத்து, கருப்பசாமி, சாமுவேல் ஜான், கார்த்திக், ரமேஷ் குமார், உறுப்பினர்கள் வீராசாமி, மற்றும் ஆலய உதவியாளர்கள் வழக்கறிஞர் குமாஸ்தாகள் ஜான், ரம்யா, பொள்ளாச்சி பத்மா, திருச்சி பாதர் ஜான் சாமுவேல், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.



ஈரோடு மாவட்டம், அம்மாபேட்டை ஊராட்சி ஒன்றியம், பட்லூர் ஊராட்சியில் செயல்பட்டு வரும் கிளை நூலகத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (02.07.2026) நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.

# மதுரை எய்ம்ஸ் மருத்துவமனையை திறக்க கோரிய மனு: ஐகோர்ட் கிளை தள்ளுபடி



மதுரையைச் சேர்ந்த கேகே ரமேஷ் உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த மனுவில், "தமிழகத்தில் எய்ம்ஸ் மருத்துவமனை அமைக்கப்படும் என 2015-ம் ஆண்டு மத்திய அரசு அறிவித்தத்து. பின்னர் 2018-ம் ஆண்டு, 45 மாதங்களில் எய்ம்ஸ் மருத்துவமனை கட்டுமானப் பணிகள் முடிக்கப்படும் என அரசுத் தரப்பில் கூறப்பட்டது. பின்னர் 2021-ல், 36 மாதங்களில் முடிக்கப்பட்டு 2026 ஜனவரி மாதம் ஒப்படைக்கப்படும் என உறுதியளிக்கப்பட்டது. ஆனால் இதுவரை பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படவில்லை.

மதுரை தோப்பூரில் அமைந்துள்ள எய்ம்ஸ் மருத்துவமனையை உடனடியாக திறந்து பயன்பாட்டிற்குகொண்டுவரவும், இந்தவிவகாரத்தில் தவறான உறுதியை அளிக்கும் அரசு அலுவலர்களுக்கு அபராதம் விதிக்கவும் உத்தரவிட வேண்டும்." என்று கூறியிருந்தார்.

இந்த மனுவை நீதிபதிகள் கார்த்திகேயன், சக்திவேல் அமர்வு விசாரித்தது. பின்னர் நீதிபதிகள், "மனுதாரர் ஒரே கோரிக்கைக்காக மீண்டும், மீண்டும் நீதிமன்றத்தை அணுகுவதை வழக்கமாகக் கொண்டிருக்கிறார்.



ஈரோடு மாவட்டம், அம்மாபேட்டை ஊராட்சி ஒன்றியம், வெள்ளித்திருப்பூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் பயிலும் மாணவ, மாணவியர்களிடம் பாடப்புத்தகத்தினை வாசிக்கச்சொல்லி, வாசிப்புத்திறன் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (02.07.2026) ஆய்வு செய்தார்.



ஈரோடு மாவட்டம், அம்மாபேட்டை ஊராட்சி ஒன்றியம், பழைய மாரியம்மன் கோவில் வீதி பகுதியில் அமைந்துள்ள நீட்ஸ் திட்டத்தின் கீழ் மானியத்துடன் கூடிய கடனுதவி பெற்று ஆயத்த ஆடைகள் தயாரிப்பு பணி மேற்கொண்டு வரும் ஷாலினி கார்மெண்ட்ஸ் நிறுவனத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (02.07.2026) களஆய்வு மேற்கொண்டார்.



மதுரை மாவட்டம் ஏழுமலை ஸ்ரீ மீனாட்சி ஜுவல்லர்ஸ் மற்றும் ஸ்ரீ ஜுவல்லரி இல்ல திருமண விழா நாகமலை புதுக்கோட்டை தனியார் திருமண மஹாலில் நடைபெற்றது. இதில் மணமக்கள் விக்னராஜா கௌசிகா பிரியதர்ஷினி ஆகியோருக்கு தென்னிந்திய வெள்ளாளர் உறவின்முறை சங்கத் தலைவர் தனவேலன் திருமணத்தை நடத்தி வைத்தார். சங்க நிர்வாகிகள் உறவினர்கள் நண்பர்கள் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டு மணமக்களுக்கு வாழ்த்து தெரிவித்தனர்

# அரசு நிர்ணயித்த எடையில் மட்டுமே இனி லாரிகளை இயக்க வேண்டும்



கோவை மாவட்டம் தடாகம் பகுதியில், கோவை மாவட்ட செங்கல் லாரி உரிமையாளர்கள் சங்கத்தினர் செய்தியாளர்களைசந்தித்தனர். அப்பொழுது..

சங்க நிர்வாகிகளான பரசுராமன், செந்தில்குமார், தமிழரசன், மற்றும் தினேஷ் குமார் கூட்டாக செய்தியாளர்களிடம் கூறியதாவது..

கோவை மாவட்ட செங்கல் லாரி உரிமையாளர்கள் சங்கத்தின் சார்பாக, வருகின்ற 6ம் தேதி 7ம் தேதி மற்றும் 8ம் தேதி ஆகிய மூன்று நாட்கள் அடையாள வேலை நிறுத்த போராட்டத்தை நடத்த உள்ளோம்.

இந்த போராட்டத்தில் சுமார் 300க்கும் மேற்பட்ட லாரிகள், கோவை மாவட்டத்தில் மட்டும் வேலை நிறுத்தம் செய்ய உள்ளதாகவும், இதனால் ஒரு நாளைக்கு 18 லட்சம் இழப்பு ஏற்படும் என்ற நிலை உள்ளது. மேலும்

இந்த தொழிலை நம்பி, உள்ள சுமார் 3000த்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்களின் வாழ்க்கை பாதிக்கும் நிலை உள்ளது. இந்த போராட்டம் நடத்த முக்கிய காரணம் அதிக எடையுடன் செங்கல்கள் ஏற்றி வரும் லாரிகளுக்குஅதிகஅளவில் காவல்துறையினர் அபராதம் விதிக்கி ன்றனர். ஆர் டி ஒ அதிகாரிகள் லாரிகளை சிறை பிடிக்கின்றனர் இதனால் லாரி உரிமையாளர்கள் கடுமையாக பாதிக்க படுகின்றனர். இதனால் அரசு நிர்ணயித்த எடையின் அளவில் லாரிகளை இயக்க உள்ளதாகவும், ஜிஎஸ்டி பில் இல்லாமல் செங்கல்களை விற்பனை செய்யும் நிறுவன ங்களில் இருந்து செங்கல்களை வாங்க மாட்டோம், எங்களதுவேலைநிறுத்த போராட்ட நாட்களில் செங்கல்கள் உற்பத்தியாகும், சேலம், பழநி, உடுமலை பேட்டை,திருவண்ணாமலை, உள்ளிட்ட பகுதிகளில் இருந்து வரும், வெளி மாவட்ட லாரி உரிமையாளர்களும் எங்களின் கோரிக்கைக்கு ஆதரவு அளிக்கவேண்டும்,என்றனர். மேலும் எங்களது சங்கத்தின்இந்தகோரிக்கையை ஏற்று, பல்வேறு மாவட்ட லாரி உரிமையாளர்கள் ஆதரவு அளித்து உள்ளதாகவும் தெரிவித்தனர்.

மேலும், வெளி மாநிலங்களில் உள்ள சேம்பர் உற்பத்தியாளர்கள், செங்கல் விலையை குறைக்க வேண்டும், அதிக விலைக்கு செங்கல்களை விற்பனை செய்வதால் கட்டுமான தொழில் பல்வேறு பாதிப்புகளுக்கு உள்ளாகுவதாக தெரிவித்தார்.மேலும் டீசல் விலை உயர்வு, உதிரி பாகங்கள் விலை உயர்வு, சாலை வரி உயர்வு, உள்ளிட்ட பல்வேறு இடையூறுகளை சந்தித்து வருவதால், இத்தகைய போராட்டத்தை நடத்த உள்ளதாக தெரிவித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# கோவை மாவட்டம் சூலூர் அடுத்த பாப்பம்பட்டி பகுதியை சுற்றியுள்ள பொதுமக்களுக்கு உடல்நிலை குறித்த விழிப்புணர்வு



கோவை மாவட்டம் சூலூர் அடுத்த பாப்பம் பட்டி பகுதியை சுற்றியுள்ள பொதுமக்களுக்கு, உடல்நிலை குறித்த விழிப்புணர்வு முற்றிலும் இல்லை, உரிய விழிப்புணர்வை ஏற்படுத்த நமது ஜே. பி மருத்துவமனை சார்பாக ஏற்படுத்தி வருகின்றோம் என மருத்துவமனை தலைவர் டாக்டர் பிரபாகரன் பேட்டி... கோவை சூலூர் அடுத்த பாப்பம் பட்டி பிரிவு பகுதியில் கடந்த,3 ஆண்டுகளாக செயல்பட்டு வருகின்றது ஜே.பி மருத்துவமனை. இந்த மருத்துவமனையானது, 100 படுக்கை வசதிகளுடன், 24 மணி நேரமும் மல்டி ஸ்பெஷாலிட்டி மருத்துவமனையாக செயல்பட்டு வருகிறது. இந்த நிலையில் இன்று ஜூலை 01 உலக மருத்துவர்கள் தினத்தை முன்னிட்டு மருத்துவமனை வளாகத்தில் செய்தியாளர்களை சந்தித்த மருத்துவமனையின் தலைவர் பிரபாகரன், மற்றும் மருத்துவமனையின் நிர்வாக இயக்குநர் டாக்டர் சுதா ஆகியோர் கூட்டாக கூறியதாவது..

அனைத்து மருத்துவர்களுக்கும் வாழ்த்துக்களை தெரிவிப்பதாகவும், இன்றைய நாளில் மருத்துவர்களின் உடல்நிலையை பேணி காக்க வேண்டும் என்று, தெரிவித்ததுடன் நமது பாப்பம் பட்டி பகுதியானது கோவை புறநகர் பகுதியாக இருத்து வருகின்றது இந்த பகுதி வாழ் மக்கள், பெரும்பாலானவர்களுக்கு உடல் சார்ந்தவைகளுக்கு முக்கியத்துவம் வழங்குவதில்லை, நமது மருத்துவமனை சார்பாக, பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளும் நடத்தி வருகின்றோம் முழு உடல் பரிசோதனை நடத்தவும் முகாம் நடத்தி வருகின்றோம். குறிப்பாக குறைந்த கட்டணத்திலும், ஏழை எளிய மக்களுக்கு மிக குறைந்த கட்டணத்திலும் இந்த வகை பரிசோதனைகளை செய்து வருவதாகவும் தெரிவித்தார் மேலும் நமது மருத்துவமனையானது, என்ஏபிஹெச் சான்றிதழ் பெற்ற மருத்துவமனையாக நிகழ்ந்து வருகின்றது. இங்கு சுமார், 30க்கும் மேற்பட்ட மருத்துவர்கள் பணியாற்றி மருத்துவமனைக்கு வழங்கப்பட்டுள்ள என்ஏபிஹெச் சான்றிதழ் என்பது இந்தியாவில் உள்ள மருத்துவமனைகள் மற்றும் சுகாதார நிறுவனங்களின் தரத்தை அங்கீகரிக்கும் ஒரு உயரிய சான்றிதழ் ஆகும். இதனை மருத்துவமனைகள் மற்றும் சுகாதார வழங்குநர்களுக்கான தேசிய அங்கீகார வாரியம் வழங்கும் ஒரு சான்றிதழ் என்றார்.

மருத்துவமனைகள் நோயாளிகளுக்கு வழங்கும் சிகிச்சையின் தரம், பாதுகாப்பு மற்றும் உள்கட்டமைப்பு வசதிகள் சர்வதேச தரத்தில் இருப்பதை உறுதி செய்வதே இதன் முக்கிய நோக்கமாகும். மருத்துவமனை சிறந்த தரம் மற்றும் பாதுகாப்பு நெறிமுறைகளைப் பின்பற்றுகிறது என்பது உறுதியாகிறது. தவறான சிகிச்சை அல்லது தொற்றுகள் ஏற்படுவதற்கானவாய்ப்புகள் பெருமளவு குறைக்க ப்படுகின்றன என்று தெரிவித்தார் என்பது குறிப்பிட த்தக்கது.

# Heavy rain in Uttarakhand, Kedarnath pilgrimage route hit by landslide; Himachal on orange alert



As moderate to heavy rainfall lashed most parts of Uttarakhand, the weather office has issued an alert for several districts, including Dehradun. Due to incessant rainfall, and falling debris and stones from hillsides, traffic movement has been affected on the Badrinath National Highway in Chamoli district and the Kedarnath Yatra route in Rudraprayag district, PTI reported.

Officials said for safety of pilgrims, the movement of vehicles and pedestrians on the Sonprayag-Munkatiya road in Rudraprayag has been temporarily suspended as a precautionary measure.

The meteorological centre has issued an "orange alert" for Dehradun, Tehri, Pauri, Nainital, and Bageshwar districts, cautioning of heavy to very heavy rainfall at isolated places.

A man died in Mumbai on Thursday after falling into a manhole amid heavy monsoon showers in the city. The incident took place when the victim was talking on phone and accidentally stepped on the manhole as the maintenance staff had removed the lid for repair work. The search operation is on as the rescuers could only spot his umbrella and slippers. Due to the strong flow of water, it could not be determined in which direction the man was carried away, officials told HT. After days of anticipation, the southwest monsoon finally arrived in Delhi on Thursday, bringing much-needed relief from the hot and humid weather.

Heavy rainfall caused disruptions across several parts of India, killing seven people in Karnataka and Himachal Pradesh as landslides, flooded roads and disrupted transport brought normal life to standstill in several regions.

While Arunachal Pradesh grappled with the aftermath of flash floods, rains battered several parts of Maharashtra while the IMD warned of heavy rain over south Bengal in the coming days. Two girls in Navi Mumbai suffered electric shock from an exposed live wire on a waterlogged road near the LP Bridge in Nerul. Delhi weather forecast | Top points

Rain in Delhi till July 7: Between July 3 and July 7, Delhi is likely to experience thunderstorms accompanied by rain every day. During this period, the minimum temperature is expected to remain between 23 degrees Celsius and 24 degrees Celsius, while the maximum is likely to hover between 33 degrees Celsius and 35 degrees Celsius.

Monsoon around July 3 or 4: Mahesh Palawat, Vice President, Skymet Weather, told news agency PTI that the monsoon is likely to reach Delhi and adjoining areas around July 3 or 4.

## பொங்கல் 2027 வேட்டி சேலை உற்பத்திக்கு நிதி ஒதுக்கீடு:

# தமிழக அரசுக்கு விசைத்தறி சங்கங்களின் கூட்டமைப்பு நன்றி மற்றும் முக்கிய கோரிக்கை



ஈரோட்டில் தமிழ்நாடு 2027-ஆம் ஆண்டு பொங்கல் பண்டிகைக்காக விலையில்லா வேட்டி, சேலை உற்பத்தி செய்ய முதற்கட்டமாக 300 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து அரசாணையை வெளியிட்ட தமிழ்நாடு முதலமைச்சர் ச.ஜோசப் விஜய் அவர்களுக்கும், ஈரோடு மாவட்டத்தைச் சேர்ந்த கைத்தறி மற்றும் கதர்த்துறை அமைச்சர் ம.விஜய பாலாஜி அவர்களுக்கும் ஈரோட்டில் தலைமை அலுவலகமாக செயல்படும் தமிழ்நாடு விசைத்தறி சங்கங்களின் கூட்டமைப்பு தனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டுள்ளது. இத்திட்டத்திற்காக மொத்தம் 642.88 கோடி ரூபாய் செலவினம் மதிப்பீடு செய்யப்பட்டுள்ள நிலையில், முதற்கட்ட மாக இந்த நிதி விடுவிக்கப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சியர்களிடமிருந்து பெறப்பட்ட தேவைப்பட்டியலின் அடிப்படையில் பொங்கல் 2027 திட்டத்திற்கு உண்மையான தேவை 2,27,83,417 சேலைகள் மற்றும் 2,25,14,094 வேட்டிகளாகும். எனினும், புதிய இரக வேட்டி மற்றும் சேலைகளை உற்பத்தியில் ஈடுபடுத்த இருப்பதாலும், உற்பத்திக்கான போதுமான கால அவகாசம் குறைவாக இருக்கின்ற காரணத்தினாலும்,

கடந்த ஆண்டுகளைப் போலவே இந்த ஆண்டும் உத்தேச இலக்காக 177.64 இலட்சம் சேலைகள் மற்றும் 177.22 இலட்சம் வேட்டிகள் உற்பத்தி செய்யஇலக்குநிர்ணயிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக, கடந்த ஆண்டு இருப்பாக வைக்கப்பட்ட முந்தைய இரகவேட்டி,சேலைகளை நடப்பு ஆண்டின் விநியோகத்திற்கு முன்னிருப்பாக (Opening Stock) எடுத்துக்கொள்ளாமல், எதிர்வரும் தீபாவளி பண்டிகையின் போது திட்ட பயனாளிகளுக்கு வழங்க ஏற்பாடு செய்திருப்பதன் மூலம் விசைத்தறியாளர்களுக்கு வேலைவாய்ப்பு கணிசமாக அதிகரிக்கும் என்பதற்கு கூட்டமைப்பு தனது நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளது. இந்த அறிவிப்புகளுக்கு மனமார்ந்த நன்றி தெரிவிக்கும் அதே வேளையில், மாவட்டங்கள் மற்றும் வட்டங்கள் வாரியாகப் பெறப்பட்ட முழுத் தேவையின்படி, தமிழகத்தில் உள்ள அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் விலையில்லா வேட்டி, சேலைகளை முழுமையாக உற்பத்தி செய்து வழங்குவதற்கு அரசு வழிவகை செய்ய வேண்டும் என்ற கோரிக்கையையும் முன்வைத்து ள்ளது. அவ்வாறு அனைத்து குடும்ப அட்டைகளுக்கும் வேட்டி, சேலைகள் முழுமையாக வழங்கப்பட்டால் மட்டுமே விசைத்தறிநெசவாளர்களுக்கு ஆறு மாத காலத்திற்கான முழுமையான வேலைவாய்ப்பு உறுதியாகக் கிடைக்கும் என்பதைச் சுட்டிக்காட்டி தமிழ்நாடு விசைத்தறி சங்கங்களின்கூட்டமைப்பு சார்பில் அரசிடம் வலியுறுத்திக் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

# எத்தியோப்பியாவில் இருந்து சென்னைக்கு கடத்தி வரப்பட்ட ரூ.15 கோடி மதிப்பு போதைப் பொருள் பறிமுதல்



சென்னை:

சென்னை விமான நிலையத்தில் ரூ.15 கோடி மதிப்புள்ள கொக்கைன் போதைப் பொரு ள் பறிமுதல் செய்யப்பட்டது.

எத்தி யோப்பியா நாட்டிலிருந்து கடத்தி வந்த கென்யா நாட்டு இள ம் பெண் கை து செய்யப்பட் டார்.

ஆப்பிரிக்க நாடான எத்தி யோப்பியாவில் இருந்து சென்னை வரும் எ த் தியோ ப்பியன் ஏர் லை ன்ஸ் பய ணிகள் வி மானத்தில் பெண் ஒரு வர்கொக்கைன்போதைப் பொருளை கடத்தி வரவுள்ளதாக வரு வாய் புலனாய்வுத் துறை யினருக்கு ரக சி யத் தகவல் கிடைத்தது.

இதைய டுத்து அ ந்த துறையின் அதிகாரிகள், சுங் கத் துறை அதிகாரி களு டன் இணை ந்து சென்னை விமான நிலை யத்தில் தீவிர கண் காணிப்பில் ஈடுபட்டிருந் தனர்.சென்னை விமா ன நிலை யத் துக்கு எத்தி யோ ப் பியா தலை நகர் அடி ஸ் அபாபாவில் இருந்து விமா னம் வந் தது.

அந்த விமானத்தில் வ ந்த பயணிகளையும், அவர்க ளின் உ டைமை க ளையும் அதிகாரிகள் தீவிர மாக சோதனை செய்துஅனுப்பிக்கொண் டிருந்தனர். அப்போது வந்த கென்யா நாட்டை சேர்ந்த 35 வயது பெண் மீது அதிகாரிகளுக்கு சந் தேகம் ஏற்பட்டது.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.